بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/04/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# ஹிஜ்ரீ 7 மற்றும் 8 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த போர்கள், படையெடுப்புகள் ஆகியவற்றின் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த பல்வேறு படையெடுப்புகள் பற்றிய குறிப்பு எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. **ஃபதக் எனுமிடத்தை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் காலிப் பின் அப்துல்லாஹ் அவர்களின் போர்ப் படை தொடர்பான குறிப்பும் காணக் கிடைக்கிறது.** ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்கள் ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு 30 நபர்களுடன் ஃபதக்கில் பனூ முர்ராவை நோக்கி சென்றார்கள். பனூ முர்ரா மக்கள் ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களின் அனைத்து தோழர்களையும் ஷஹீது ஆக்கி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது பற்றிய செய்தி கிடைத்ததும் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்களை ஆயத்தம் செய்து அவர்களுடன் 200 சஹாபிகளை அனுப்பி வைத்தார்கள். இந்த படையெடுப்பில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. போர்ச் செல்வமும் கிடைத்தது.

**பிறகு, ஷுஜாஃ பின் வஹப் அவர்களின் படையெடுப்பைப் பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது.** இந்த படையெடுப்பு ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. இந்த படையெடுப்பின் விபரம் என்னவென்றால், ஸிய்யீ எனும் பகுதியில் பனூ ஹவாஸின் மக்கள் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், முஸ்லிம்களின் நட்புக் கோத்திரத்து மக்களிடம் கொள்ளையடித்துவிட்டு காடுகளில் ஒளிந்து கொள்கிறார்கள் என்றும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தொடர்ச்சியாக செய்திகள் கிடைத்துக் கொண்டிருந்தன. ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஷுஜாஃ (ரலி) அவர்களிடத்தில் 24 முஜாஹிதுகளை கொடுத்து பனூ ஹவாஸினை அழித்தொழிப்பதற்காக நியமித்தார்கள். அம்மக்கள் பனூ ஆமிர் என்றும் அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் ஷுஜாஃ (ரலி) அவர்கள் தம் தோழர்களுடன் இரவில் பயணம் செய்வார்கள்; பகலில் மறைந்திருப்பார்கள். எந்த அளவுக்கு என்றால், திடீரென்று காலை வேளையில் பனூ ஆமிரை சென்றடைந்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஹஸ்ரத் ஷுஜாஃ (ரலி) அவர்கள் தம் தோழர்களிடம், அம்மக்களை பின்னால் விரட்டிச் செல்லக்கூடாது என்றும் கட்டளையிட்டிருந்தார்கள். அந்த படையெடுப்பில் முஸ்லிம்களுக்கு பல ஒட்டகங்களும் ஆடுகளும் கிடைத்தன. அவற்றை அவர்கள் மதீனாவுக்கு கொண்டு வந்து போர்ச் செல்வத்தை பங்கிட்டனர். ஒவ்வொரு நபருடைய பங்கிலும் 15 ஒட்டகங்கள் கிடைத்தன. இந்த படையெடுப்புக்காக மொத்தம் 15 நாட்கள் செலவானது.

**பிறகு, ஹஸ்ரத் கஅப் பின் உமைர் கஃப்பாரீ அவர்களின் படையெடுப்பு பற்றிய குறிப்பு காணக்கிடைக்கிறது.** இந்த படையெடுப்பு ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கஅப் பின் உமைர் கஃப்பாரீ

(ரலி) அவர்களின் தலைமையில் 15 சஹாபிகளை ஸாத்தே அத்லாஹ் எனும் இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அது சிரியாவில் வாதியுல் குறாவுக்கு பின்புறத்தில் இருந்தது. ஸாத்தே அத்லாஹ்வுக்கு அருகில் சென்றடைந்த போது எதிரியுடைய ஒற்றன் ஒருவன் இவர்களைப் பார்த்து விட்டான். அவன் உடனடியாக தம்முடைய ஆட்களிடம் சென்று முஸ்லிம்கள் படையெடுத்து வருவதைக் குறித்து தகவல் தெரிவித்து விட்டான். ஆகவே, அவர்கள் ஆயத்தம் மேற்கொண்டு பெரும் படையை திரட்டி விட்டார்கள். சஹாபிகள் அம்மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்கள் சஹாபிகள் மீது அம்பெய்ய ஆரம்பித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்கள் இம்மக்களின் இந்த நடவடிக்கையைக் கண்டபோது அவர்களை எதிர்த்து துணிவுடன் போர் செய்தார்கள். எந்த அளவுக்கென்றால் போரிட்டவாறே அனைவரும் ஷஹீதாகி விட்டார்கள். அந்த சஹாபிகளில் ஒருவர் கொல்லப்பட்டவர்களுடன் காயமடைந்த நிலையில் கிடந்ததால் அவர் அங்கிருந்து தப்ப முடிந்தது. ஓர் அறிவிப்பின் அடிப்படையில், அந்த நபர் ஹஸ்ரத் கஅப் பின் உமைர் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், இரவு குளிர்ந்ததும் அவர் பயணித்து பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து சேர்ந்தார். அன்னாரிடம் அந்த சம்பவத்தைப் பற்றி தகவல் கொடுத்தார். அதைக் கேட்டு அன்னாருக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. அப்போதே அம்மக்களை நோக்கி ஒரு படையை அனுப்ப எண்ணம் கொண்டார்கள். ஆனால், அம்மக்கள் அந்த இடத்தை விட்டு கிளம்பி எங்கோ சென்று விட்டார்கள் என்று அன்னாருக்கு தெரியவந்தபோது அந்த எண்ணத்தை தள்ளி வைத்து விட்டார்கள்.

**முஃதா எனும் போர் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஜமாதியுல் ஊலா மாதத்தில் அதாவது கி.பி 629 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்தது.** முஃதா என்பது மதீனாவில் இருந்து ஏறக்குறைய 600 மைல் தொலைவில் சிரியாவின் எல்லைப் பகுதியில் இருந்தது. இந்த போருக்கான காரணம், பெருமானார் (ஸல்) அவர்கள் சார்பாக அனுப்பப்பட்ட தூதுவர் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் (ரலி) அவர்கள் கொடூரமாக ஷஹீதாக்கப்பட்டதாகும். அதைக் கேட்டு அன்னாருக்கு மிகுந்த மனவருத்தம் ஏற்பட்டது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** “ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரோமானிய அரசு சார்பாக புஸ்ராவில் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த கஸ்ஸான் கோத்திரத் தலைவருக்கோ அல்லது ரோமானிய அரசர் கெய்சருக்கோ கடிதம் எழுதினார்கள். சிரியாவிலுள்ள சில கோத்திரங்கள் முஸ்லிம்களுக்கெதிராக சதித்திட்டம் தீட்டியவாறு இஸ்லாமியப் பகுதியின்மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன என்றும், அவர்கள் எந்தக் காரணமுமின்றி பதினைந்து முஸ்லிம்களைக் கொன்று விட்டனர் என்றும் அநேகமாக அக்கடிதத்தில் முறையீடு செய்திருந்தார்கள். அக்கடிதம் ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) எனும் ஒரு நபித்தோழர் மூலம் அனுப்பப்பட்டது. அவர் வழியில் முஃதா எனும் இடத்தில் தங்கினார். அங்குச் கெய்சர் மன்னரால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுள் ஒருவனான கஸ்ஸான் கோத்திரத்தலைவன் ஷுரஹ்பீல் என்பவன் அவரைச் சந்தித்து, அவரை கைது செய்து கொலை செய்து விட்டான். ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்கள் கொல்லப்பட்ட செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்த போது இதற்கு முன்னர் நிகழ்ந்த (அதாவது, 15 பேர் கொல்லப்பட்ட) சம்பவத்திற்கும் இப்பொழுது நிகழ்ந்த சம்பவத்திற்கும் தண்டனை வழங்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மூவாயிரம் பேரைக் கொண்ட ஒரு படையை ஆயத்தமாக்கினார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அதற்கு தளபதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் ஸைது ஷஹீது ஆகிவிட்டால், ஹஸ்ரத் ஜாஃபர் பின் அபீதாலிப் தளபதியாக இருப்பார். ஹஸ்ரத் ஜாஃபர் பின் அபீதாலிப் ஷஹீது

ஆகிவிட்டால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா தளபதியாக இருப்பார். அவரும் ஷஹீது ஆகிவிட்டால், முஸ்லிம்கள் தங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் தளபதியாக்கிக் கொள்ள வேண்டும் என்று அன்னார் கூறினார்கள்.

நுஃமான் எனும் பெயர் கொண்ட ஒரு யூதரும் அங்கு இருந்தார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அபுல் காசிம் அவர்களே! தாங்கள் உண்மையான நபி என்றால் தாங்கள் எந்தெந்த நபர்களுடைய பெயரை எடுத்துக் கூறினீர்களோ அவர்கள் அனைவரும் ஷஹீது ஆகி விடுவார்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்த ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களைப் பார்த்து, ஸைதே! நீங்கள் உயில் எழுதி விடுங்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான நபி என்றால், நீங்கள் ஒருபோதும் உயிருடன் திரும்பி வரமாட்டீர்கள் என்றார். அதற்கு ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையான இறைத்தூதராவார்கள் என்று நான் சாட்சி அளிக்கிறேன் என்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தளபதிகளை நியமித்துக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் என்மீது ஸைது அவர்களை அமீராக நியமிப்பீர்கள் என்று நான் கருதவில்லை என்றார்கள். அதற்கு அன்னார், நீங்கள் செல்லுங்கள்! சிறந்தது எது என்று உங்களுக்கு தெரியாது என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களிடம் ஒரு வெள்ளை நிற கொடியை கொடுத்து, ஹாரிஸ் அவர்கள் ஷஹீதாகிய இடத்திற்கு நீங்கள் செல்லுங்கள். அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுங்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது; இல்லையென்றால் அவர்களுக்கெதிராக அல்லாஹ்விடம் உதவி வேண்டியவாறு அவர்களுடன் போர் செய்யுங்கள் என்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை வழி அனுப்பி வைக்கும்போது அறிவுரைகளை வழங்கியவாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுமாறும், உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வை மறுப்பவர்களுடன் போரிடச் செல்லுங்கள். நீங்கள் ஏமாற்றக் கூடாது; மோசடி செய்யக் கூடாது; பால் அருந்தும் எந்த குழந்தையையும் கொலை செய்யக் கூடாது; எந்த ஒரு பெண்ணையும், வயதானவரையும் கொல்லக்கூடாது; எந்த ஒரு பேரீச்ச மரத்தையும் வெட்டக்கூடாது; எந்தவொரு மரத்தையும் வெட்டக்கூடாது; எந்த ஒரு கட்டடத்தையும் இடிக்கக் கூடாது.

பிறகு, அந்த படையின் தளபதியிடம், நீங்கள் ஒரு முஷ்ரிக்கை சந்திக்கும் போது மூன்று விஷயங்களின் பக்கம் அவருக்கு அழைப்பு கொடுங்கள். அதில் ஒன்றை அவர் ஏற்றுக்கொண்டாலும் அதை ஒப்புக்கொள்ளுங்கள். மேற்கொண்டு அவருக்கு துன்பம் கொடுக்காதீர்கள். அவர் தம் நகரத்தை விட்டுவிட்டு முஹாஜிர்களுடைய நகரத்திற்கு இடம் மாறி வந்துவிட வேண்டும் என்று அவருக்கு அழைப்பு கொடுங்கள். அவர் அவ்வாறு செய்துவிட்டால், முஹாஜிர்களுக்கென்று என்ன இருக்குமோ அதுவே அவர்களுக்கும் பொருந்தும் என்றும், முஹாஜிர்கள் மீது எது நிர்ணயிக்கப்படுமோ அதுவே அவர்கள் மீதும் இருக்கும் என்றும் கூறி விடுங்கள்.

அவர்கள் இதை மறுத்து விட்டால், அவர்கள் முஸ்லிம்களை விட்டு விலகி பாலைவனங்களை நோக்கி சென்றுவிட வேண்டும் என்று கூறுங்கள். அதாவது கிராமங்களுக்குச் சென்று விட வேண்டும். மற்ற முஸ்லிம்களைக் குறித்து அல்லாஹ்வின் கட்டளை என்ன உள்ளதோ அதுவே அவர்களுக்கும் பொருந்தும். ஆனால், அவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து போரில் கலந்து கொள்ளாதவரை அவர்களுக்கு போர்ச் செல்வமோ ஃபே எனப்படும் போர்செல்வமோ கிடைக்காது. அவர்கள் இதையும் மறுத்து விட்டால் அவர்களிடம் ஜிஸ்யா வரியைக் கேளுங்கள். அவர்கள் இதை ஒப்புக்கொண்டால்

அவர்களிடமிருந்து அதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களுக்கு துன்பம் கொடுப்பதை விட்டு விலகிக் கொள்ளுங்கள். அவர்கள் இதையும் மறுத்து விட்டால் அவர்களுக்கெதிராக அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள்; அவர்களுக்கு எதிராக போர் செய்யுங்கள். நீங்கள் ஏதேனும் ஒரு கோட்டையையோ நகரத்தையோ முற்றுகையிடும் போது அவர்கள் உங்களிடம், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய பெயரில் நிபந்தனைகளை வகுக்க விரும்பினால் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய பெயரில் நிர்ணயித்துக் கொள்ளாதீர்கள்."

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** "அல்லாஹ்வின் நுட்பமான நடைமுறைக்கேற்ப அந்த சம்பவம் முற்றிலும் அவ்வாறே நிகழ்ந்தது. முதலில் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் ஷஹீது ஆனார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் படையின் பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள். அவர்களும் ஷஹீது ஆனார்கள். அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் படையின் பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள். அவர்களும் ஷஹீது ஆனார்கள். விரைவில் இஸ்லாமிய படை சிதறுண்டு போகக் கூடிய வாய்ப்பு இருந்தது. அப்போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் சில முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கிணங்க இஸ்லாமிய கொடியை தம் கையில் பிடித்துக் கொண்டார்கள். அல்லாஹ் இவர்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். அவர்கள் நலமுடன் படையை அழைத்துக் கொண்டு திரும்பினார்கள்."

இந்த குறிப்பு இன்னும் தொடர்கிறது; இனி வரக்கூடிய காலத்திலும் தொடரும் இன்ஷா அல்லாஹ்.

இப்போது நான் ஒரு ஷஹீதைப் பற்றியும், சில மர்ஹூம்களின் நற்குறிப்பைப் பற்றியும் எடுத்துரைக்க விரும்புகின்றேன். தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

**மதிப்பிற்குரிய சவுத்ரி நஸீர் அஹ்மத் சீமா (cheema) சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய லயீக் அஹ்மத் சீமா சாஹிப் அவர்களை ஏப்ரல் 18 ஆம் தேதி கராச்சியில் ஒரு கூட்டம் செங்களைக் கொண்டும் கற்களைக் கொண்டும் தாக்கி மிகவும் அநியாயமான முறையில் ஷஹீது ஆக்கியுள்ளார்கள்.** இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹீதுடைய வயது 47 ஆகும். ஷஹீது மர்ஹூம் அவர்கள் ஒரு ஓர்க் ஷாப் வைத்திருந்தார்கள். அவர்களின் நேர்மையின் காரணமாக தொழில் மிகவும் விரிவடைந்திருந்தது. மர்ஹூம் மூஸி ஆவார்கள். நன்கு செயல்படக்கூடிய ஜமாஅத் தொண்டராகவும், தொழுகை நோன்பு ஆகியவற்றை பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், எளிதில் பழகக்கூடியவராகவும், நேசிக்கக்கூடியவராகவும், மிகவும் தைரியசாலியாகவும், கிலாஃபத்துடன் குறிப்பான தொடர்புடையவராகவும், குத்பாக்களை கவனமாகக் கேட்கக் கூடியவராகவும், ஜமாஅத்துடைய (நீதிமன்ற) வழக்குகளை பின்தொடர்வது சம்பந்தமாகவும், அதில் டியூட்டி கொடுப்பதற்காகவும் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்து வந்தார்கள். ஷஹாதத் சம்பவத்திற்கு இரு நாட்களுக்கு முன்னரும் கூட எதிரிகள் சார்பாக நீதிமன்றத்தில் மர்ஹூம் அவர்களுக்கு மிரட்டல்களும் கொடுக்கப்பட்டன. திருக்குர்ஆன் மீது எல்லையில்லா நேசம் இருந்தது. இரு மனைவிகளையும், ஏழு பிள்ளைகளையும் பின்விட்டுச் சென்றுள்ளார்கள். அத்துடன், ஒரு சகோதரனும், சகோதரியும் உள்ளனர்.

இன்று கஸூர் எனும் ஒரு கிராமத்தில் அஹ்மதி இளைஞர் ஒருவர் ஷஹீதாக்கப்பட்டுள்ளார் என்றும் ஒரு தகவல் கிடைத்துள்ளது. விவரங்கள் இன்னும் வந்தடையவில்லை.

.

அல்லாஹ் ஷஹீதுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவர்களுடைய மனைவி மக்களையும் தம் பாதுகாப்பில் வைப்பானாக. எதிரியை பிடிப்பதற்கான விரைவான ஏற்பாட்டை செய்வானாக! எதிரிகளுக்கு இப்பொழுது,

اللّٰهُمَّ مَزِّقْهُمْ كُلَّ مُمَزَّقٍ وَسَحِّقْهُمْ تَسْحِيْقًا

என்ற இ(ந்த) து(ஆ)தான்.

**இரண்டாவது நற்குறிப்பு, டாக்டர் மஸ்ஊதுல் ஹஸன் நூரி சாஹிபின் மனைவியாகிய மதிப்பிற்குரிய அமத்துல் முஸவ்விர் நூரி சாஹிபா அவர்களுடையதாகும்.** இவர்கள் கடந்த நாட்களில் வஃபாத் ஆகி இருக்கிறார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூமா அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழி பேத்தியும், ஹஸ்ரத் நவாப் அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா (ரலி) அவர்களின் மகள் வழி பேத்தியும், மிர்ஸா தாவூத் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகளும் ஆவார்கள். மர்ஹூமா அவர்கள் என் தந்தையின் சகோதரருடைய மகள் என்ற முறையில் எனக்கு சகோதரியும் ஆவார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூமா அவர்கள் தொழுகை, நோன்பு ஆகியவற்றை பேணக்கூடியவர்களாகவும், இறைவன் மீது அதிக நம்பிக்கை கொண்டவராகவும், நல்லியல்பு கொண்டவராகவும், பல்வேறு மார்க்கங்களைக் குறித்து ஆய்வு செய்யக் கூடியவராகவும், கணவருடைய பணிகளில் ஒத்துழைப்பு வழங்கக் கூடியவராகவும், பொறுமையாளராகவும், கலப்பற்ற மார்க்கத் தொண்டராகவும், திருக்குர்ஆனை நேசிப்பவராகவும், ஏழைகளின் துக்கத்தில் பங்கெடுக்கக் கூடியவராகவும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் நூல்களை படிக்கும் பழக்கமுள்ளவராகவும், வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு கண்ணியமளிப்பவராகவும் இருந்தார்கள்.

**மூன்றாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஹஸ்ஸன் சானுகோ அபூபக்ர் (Hassan Sanugo Abu Bakr) சாஹிப் அவர்களுடையதாகும்.** Burkina Faso -வில் உள்ளூர் முபல்லிக் ஆக இருந்தார்கள். கடந்த நாட்களில் 63 வயதில் வஃபாத் ஆகி இருக்கிறார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் அவர்கள் உள்ளூர் மொழியில் திருக்குர்ஆன் தர்ஸ் கொடுத்து வந்தார்கள். இந்த தர்ஸ் ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டு வந்தது. மர்ஹூம் அவர்கள் எகிப்தில் உள்ள Al-Azhar University -யில் அரபி மொழியில் உயர் கல்வி கற்றார்கள். நல்லடியார், தப்லீக் ஆர்வமுள்ளவர், துணிவுள்ளவர், சிறந்த சொற்பொழிவாளர், திருக்குர்ஆனை நேசிப்பவர், மலர்ந்த முகமுடையவர் ஆவார்.

இவ்வாறான, தொண்டர்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு எப்போதும் வழங்கிக் கொண்டே இருப்பானாக!

***குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் மக்ஃபிரத் மற்றும் உயர் அந்தஸ்துக்காக துஆ செய்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)